பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 06 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடு முழுவதும் கடந்த பத்து நாட்களாக நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு இயக்கத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**2.** இயற்கை வேளாண்மைக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

**3.** பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**4.** நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலாவுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

**5.** இத்தாலி ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anwesha Gowda** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>

நாடு முழுவதும் கடந்த பத்து நாட்களாக நடைபெற்ற போதைப்பொருள் இல்லா இந்தியா விழிப்புணர்வு இயக்கத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஹரித்துவாரில் நடைபெற்ற பிரதான நிகழ்ச்சியில் மட்டும் நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தியதாக சமூக நீதித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இயக்கத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் ஆர்வத்துடன் பங்கேற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதியாளர்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள அவர், லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசினார்.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக மத்திய அரசு ஏற்படுத்தித்தரும் வாய்ப்புகளை தொழில்துறையினர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

இயற்கை வேளாண்மைக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளர்.

உத்தராகண்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விவசாயிகள் தங்களது நிலத்தின் ஒருபகுதியை இயற்கை வேளாண்மைக்கு ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்மூலம், மண்வளம் பாதுகாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பாரம்பரிய தானியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

மின்துறை செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதில் அதற்கான ஒழுங்கு முறை ஆணையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் மாநில மின் ஒழுங்கு முறை ஆணையர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மின்நுகர்வோர்களின் குறைகளை குறித்த காலத்திற்குள் தீர்ப்பதிலும் ஒழுங்கு முறை ஆணையங்கள் இன்றியமையாத பங்கு வகிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பூட்டானுடன் கல்வித்துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்பட உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக பூட்டான் சென்றுள்ள அவர், அந்நாட்டு கல்வி அமைச்சர் திருமதி **Yeezang De Thapa**-வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, சுற்றுலா, பாரம்பரிய மருத்துவம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், உலக அளவில் அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் மாற்றங்களை கொண்டுவர உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் நவீன தொழில்நுட்பமும், புதுமை கண்டுபிடிப்புகளும் முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

புதுச்சேரி பூரணாங்குப்பம் அரசு நடுநிலைப்பள்ளியில் அமைந்துள்ள புதுப்பிக்கப்பட்ட பழமையான முழியன் குளத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று திறந்துவைத்தார்.

400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த குளம், மறுசீரமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலாவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்காக ஆபரேஷன் **Amistad** நடவடிக்கையை இந்தியா தொடங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

இதன்கீழ், இரண்டு விமானப்படை போர் விமானங்கள் **35** டன்னுக்கும் கூடுதலான நிவாரணப் பொருட்களுடன் வெனிசுலா புறப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை **589-**ஆக அதிகரித்துள்ளதாகவும், மூவாயிரம் பேர் காயமடைந்துள்ளதாகவும் வெனிசுலா அரசு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தமிழக அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதியாக திரு கே வெங்கட நாராயணா நியமிக்கப்பட்டுள்ளார்.

பொறுப்பேற்கும் நாளில் இருந்து ஓராண்டிற்கு அவர் இப்பதவியை வகிப்பார் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு விவகாரத்தில் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

**Deoria** -வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுதொடர்பாக, சிறப்பு புலனாய்வுக்குழுவின் அறிக்கை பெறப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

இதற்கிடையே, இதுதொடர்பான வழக்கில் எட்டு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில காவல்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் பொது சிவில் சட்டம் உரிய சட்ட நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு **Suvendu Adhikari** கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குஜராத் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகள் மேற்குவங்கத்திலும் கடைபிடிக்கப்படும் என்றார்.

<<<<<<>>>>>

சத்தீஸ்கட்டிலும் பொது சிவில் சட்டம் செயல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் கூறியுள்ளார்.

ராய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இக்குழு, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கருத்துகளை கோரி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் பொது சிவில் சட்டம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் திரு விஷ்ணு தியோ சாய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பஞ்சாபில் சிறை கைதிகளுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் மாநில அரசு உறுதியுடன் உள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் பல்பீர் சிங் கூறியுள்ளார்.

இன்று லூதியானாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

போதைப்பொருளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்களை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு பல்பீர் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>

தெலங்கானா அரசின் தலைமைச் செயலராக திரு சஞ்சய் ஜாஜூ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப்பதவியை வகித்துவரும் திரு ராமகிருஷ்ணா ராவ் வரும் **30**-ஆம் தேதி ஓய்வு பெறுவதையடுத்து இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

ஜார்கண்டில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் **7** பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

**Ramgar** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த லாரி, வேன் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள அம்மாநில முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

சீன அதிபர் திரு **Xi Jinping,** பங்களாதேஷ் பிரதமர் திரு **Tarique Rahman** இடையேயான பேச்சுக்கள் இன்று பெய்ஜிங்கில் நடைபெற்றன.

அரசு முறைப்பயணமாக பெய்ஜிங் சென்றுள்ள பங்களாதேஷ் பிரதமர், அந்நாட்டு அதிபருடன் நடத்திய பேச்சுக்களின்போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷூக்கு தேவையான அனைத்து உதவிகளையும் சீனா வழங்கும் என்றும் திரு **Xi Jinping** இந்த பேச்சுக்களின்போது உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>

அமெரிக்கா — ஈரான் இடையேயான மோதலை களைவதற்கென ராணுவ பிரதிநிதிகளை கொண்ட குழுவை ஏற்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

இங்கிலாந்து செய்தி ஊடகத்துக்கு அளித்த பேட்டியில இதனை உறுதி செய்த அமெரிக்க துணை அதிபர் திரு **J D Vance,** இதற்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகள் தோஹாவில் இருந்து செயல்படுவார்கள் என்று கூறினார்.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இத்தாலி ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anwesha Gowda** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-16, 21-18** என்ற செட் கணக்கில், துருக்கியின் **Ravza Bodur-**ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் பார்கவ் சோமசுந்தராவும், **Orijit Chaliha-**வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

இந்தியா — அயர்லாந்து இடையேயான முதலாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி தற்போது **Belfast-**ல் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் பேட் செய்துவரும் அயர்லாந்து, சற்றுமுன்வரை **14** ஓவரில் **4** விக்கெட் இழப்பிற்கு **111** ரன் எடுத்துள்ளது

---------------

புல்லட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இணையதளம் வாயிலாக நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் அவர், **16-6** என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் **Andrew Tang**-ஐ வென்றார்.

------------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் **Hammer Throw** பிரிவில் பங்கேற்க இந்தியாவின் **Damneet Singh** மற்றும் **Praveen Kumar** தகுதி பெற்றுள்ளனர்.

**<<<<<<<END>>>>>**